

# தமிழ் லீடர்

ஜனவரி 2024


எஸ்.கே.முருகன்

ஜாலியா... கேலியா ஓர் அரசியல் இதழ்











சினிமா சிறப்பிதழ்

## தமிழ் ஹாலிவுட் தமிழ் லீடர்

# சினிமா விருதுகள் 2023



# தமிழ் ஹாலிவுட் தமிழ் லீடர் சினிமா விருதுகள் 2023

தமிழ் சினிமா கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழ் ஹாலிவுட் சார்பில் தமிழ் லீடர் பத்திரிகை விருதுகள் வழங்கி கௌரவித்துவருகிறது. அந்த வகையில் 2023ம் ஆண்டுக்குரிய விருதுகள் அறிவிக்கப் பட்டுள்ளன.

சினிமா மற்றும் பத்திரிகை துறையில் பணியாற்றும் பத்துக்கும் மேற்பட்ட நபர்கள் இணைந்து விருதுக்கு தகுதியானவர்களை தேர்ந்தெடுத்துள்ளனர். வெற்றி பெற்றவர்களை வாழ்த்துவதில் தமிழ் லீடர் பெருமிதம் கொள்கிறது.





## சிறந்த திரைப்படம்: மாமன்னன்

விடுதலை, மாமன்னன், ஜிகிர்தண்டா ஆகிய மூன்று படங்களே சிறந்த திரைப்படத்துக்கான போட்டிக்குத் தகுதியாக இடம் பிடித்தன. சித்தா, குட்நைட் போன்ற படங்கள் ஃபீல் குட் என்று சொல்லப்பட்டாலும், சிறந்த சினிமாவுக்குரிய ஏரியாவுக்குள் நுழையவில்லை. கார்த்திக் சுப்புராஜின் ஜிகிர்தண்டா மலை மக்களின் நிஜ வாழ்க்கையை அழுத்தமாகக் காட்டியது என்றாலும், ஃபேண்டஸி வகையில் கதை சொல்லப்பட்டதால் சிறந்த திரைப்பட போட்டியில் இருந்து வெளியேறியது. விடுதலை, மாமன்னன் ஆகிய இரண்டு படங்களுமே ஒடுக்கப்பட்ட மக்களின் வலியை பேசிய திரைப்படங்கள். அதிகார ஆணவத்தை வெளிப்படுத்து வதற்கே விடுதலை அதிக முக்கியத்துவம் கொடுத்தது. ஜாதி வன்மத்தை நேரடியாகவும், அழுத்தமாகவும் பதிவுசெய்த காரணத்தால் மாமன்னன், சிறந்த படத்துக்கான விருதை தட்டிச் செல்கிறது. சிறந்த திரைப்படம் தயாரித்த ரெட் ஜெயண்ட் மூவிஸ் உதயநிதி ஸ்டாலின் சிறந்த தயாரிப்பாளர் விருது பெறுகிறார்.



## சிறந்த நடிகர்:
## சூரி (விடுதலை)

ரஜினிகாந்த், விஜய், அஜித், தனுஷ், கார்த்தி, விஜய்சேதுபதி ஆகிய பெருந்தலைகள் நடித்த திரைப்படங்கள் இந்த ஆண்டு வெளியாகியிருந்தாலும், சிறந்த நடிகர் விருதுக்கு தகுதியான நபரை தேடித்தான் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது.

பொதுவாக தனுஷ் நடிக்கும் படங்களில், அவரது கேரக்டரை மிகவும் அழுத்தமாக பதிய வைத்து நடிப்புக்கு முக்கியத்துவம் கொடுப்பார். ஆனால், வாத்தி படத்தில் அவரது கேரக்டர் சரியாக வடிவமைக்கபடவில்லை. மாணவர், ஆசிரியர், முதியவர் என்று தனுஷ் நிறைய வேடத்தில் வந்தாலும், அவை எல்லாமே பழைய படங்களின் சாயலே தவிர, அழுத்தமாக மனதில் பதியவில்லை. மாமன்னன் படத்தில் நடிகர் வடிவேலுவின் நடிப்பு சிறந்த நடிகருக்கான வகையில் அமையவில்லை.

விடுதலை படத்தில் சூரியிடம் புதிய உடல் மொழியை காண முடிந்தது. கொடுக்கப்பட்ட பாத்திரத்துக்கு மிகச்சிறப்பாக உயிரூட்டியிருக்கிறார். தான் விரும்பும் பெண்ணுக்கு ஆபத்து வந்துவிடக் கூடாது என்ற அவரது பதைபதைப்பு பார்த்தவர்களையும் ஒட்டிக்கொள்கிறது. ஆகவே, இந்த ஆண்டுக்கான சிறந்த நடிகர் விருதை எந்த போட்டியும் இல்லாமல் தட்டிச் செல்கிறார் நடிகர் சூரி.



## சிறந்த நடிகை:
## நிமிஷா சஞ்சயன் (சித்தா)

கிரேட் இந்தியன் கிச்சன் படத்தில் ஐஸ்வர்யா ராஜேஷ், மாமன்னன் படத்தில் கீர்த்தி சுரேஷ், மாஸ்டர் படத்தில் த்ரிஷா என சிறந்த நடிகைக்கு போட்டியிட்டவர்களின் எண்ணிக்கை ரொம்பவே குறைவு. ஆனாலும் இவர்களுக்குள் சிறந்த நடிகை என ஒருவரை தேர்வு செய்ய முடியவில்லை.

இறுகப்பற்று, டாடா படத்தின் நாயகிகள் சில காட்சிகளில் சிறப்பாக நடித்திருந்தாலும், அவர்கள் நடிப்பதற்குரிய முழு வாய்ப்பு அமையவில்லை. அதேநேரம், ஜிகிர்தண்டா படத்திலும் சித்தா படத்திலும் நிமிஷா ஏற்ற வேடங்கள் தனித்தன்மை வாய்ந்தவை. வழக்கமான கதாநாயகியாக இல்லாமல், இயல்பான நடிப்பை வெளிக்காட்டியிருந்தார். குறிப்பாக சித்தா படத்தில் தூய்மைப் பணியாளர் வேடம் தமிழுக்குப் புதுசு. அந்த வேடத்தில் அட்டை போன்று ஒட்டிக்கொண்டு காதல் செய்வதை, பரிதாபம் காட்டுவதை, கோபம் காட்டுவதை எல்லாம் இயல்பாகச் செய்திருக்கிறார். மிகை நடிப்பு இல்லாமல் பாத்திரத்தோடு பாத்திரமாக ஒன்றிப்போன நிமிஷாவுக்கு 2023 சிறந்த நடிகைக்கான விருது வழங்கப்படுகிறது.






# சிறந்த இயக்குனர்: கார்த்திக் சுப்புராஜ் (ஜிகிர்தண்டா டபுள் எக்ஸ்)

சிறந்த படங்களுக்கான போட்டியிலிருந்த மூன்று இயக்குனர்களான வெற்றி மாறன், கார்த்திக் சுப்புராஜ், மாரி செல்வராஜ் ஆகிய மூவர் மட்டுமே சிறந்த இயக்குனர் தேர்வில் பரிசீலனை செய்யப்பட்டார்கள். வெற்றிமாறன் மற்றும் மாரி செல்வராஜ் ஆகியோரின் திரைப்படங்களில் அவர்களது முந்தைய படங்களின் சாயல் அதிகம் தென்பட்டன. காவல் துறை என்றாலே அடக்குமுறை யைத்தான் காட்டும் என்று விடுதலை படத்திலும், ஒடுக்கப்பட்டவர்களுக்கு எதிராக வன்முறை நடக்கும் என்று மாமன்னன் படத்திலும் மிக எளிதாக யூகிக்க முடிகிறது. ஆனால், இந்த படம் எந்த திசையில் செல்லும் என்று யூகிக்க முடியாத அளவுக்கு படத்தை கொண்டுபோயிருந்தார் கார்த்திக் சுப்புராஜ். தமிழ் சினிமாவில் இல்லாத ஒரு புதுமையான க்ளைமாக்ஸ் காட்சியை கொடுத்த வகையிலும், கொடூரமான வன்முறைக்கு இடமிருந்தாலும், கொஞ்சம் அடக்கியே படமெடுத்திருந்த கார்த்திக் சுப்புராஜ், 2023 சிறந்த இயக்குனர் விருது பெறுகிறார்.



# சிறந்த கதை, திரைக்கதை: கார்த்திக் சுப்புராஜ் (ஜிகிர்தண்டா டபுள் எக்ஸ்)

2023ம் ஆண்டு நிறையவே பரீட்சார்த்த ரீதியிலான திரைப்படங்கள் வந்திருக்கின்றன. குறிப்பாக யாத்திசை, தண்டட்டி, தலைக்கூத்தல், அயோத்தி, குட் நைட், சித்தா, இறுகப்பற்று, கிடா, பார்க்கிங் படங்கள் புதிய வழியில் கதை சொல்லியது. ஆனால், இவை எதுவுமே வெகுஜன மக்களின் மனதை கவரவில்லை. வெற்றிபெற்ற படங்களில் ஜிகிர்தண்டா டபுள் எக்ஸ் கதை படு வித்தியாசமாக அமைக்கப்பட்டிருந்தது. இதுவரை எந்த படத்திலும் இல்லாத வகையில், லாரன்ஸின் கிளைமாக்ஸ் காட்சி மிகச் சிறப்பாக எழுதப்பட்டிருந்தது. படத்தில் ஆரம்பம் முதல் இறுதி வரையிலும் காட்டப்படும் யானை குறியீடுகளும் தமிழுக்கு ரொம்பவே புதுசு. சினிமா சூட்டிங் என்று கவர்ச்சியான கதாநாயகி இடம்பெறுவதற்கு நிறையவே வாய்ப்பு இருந்தாலும், சொல்லவந்த கதையை மட்டும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார் கார்த்திக் சுப்புராஜ். ஒரு கதைக்குள் கதை, அந்த கதைக்குள் கதை, அந்த கதைக்குள் கதை என்று எக்கச்சக்க கதைகள் இருந்தாலும், அத்தனையும் குழப்பமில்லாமல் தெளிவான லைனில் செல்வதால், சிறந்த கதை, திரைக்கதைக்கான விருதினை எந்த போட்டியும் இல்லாமல் தட்டிச் செல்கிறார் கார்த்திக் சுப்புராஜ்.




# சிறந்த அறிமுக இயக்குனர்: விக்னேஷ் ராஜா (போர் தொழில்)

முதல் படத்தில் சக்சஸ் இயக்குனராக ஒருவர் மாறுவது சாதாரண விஷயமல்ல. ஆனால், இந்த ஆண்டு அந்த சாதனையை நிறைய இயக்குனர்கள் தமிழில் படைத்திருக்கிறார்கள். எனவே, கடுமையான போட்டி சிறந்த அறிமுக இயக்குனர் விருதுக்கே இருந்தது.

2023ம் ஆண்டு ஐந்து இயக்குனர்கள் சிறிய பட்ஜெட் படம் இயக்கி கவனிக்கத்தக்க இடத்தைப் பிடித்திருக்கிறார்கள். நாயகனின் இஸ்லாமிய பெயர் மட்டும் போதும் என்ற நம்பிக்கையில், ‘அயோத்தி’ படம் எடுத்து எல்லோரையும் கவனிக்க வைத்திருக்கிறார் மந்திரமூர்த்தி.

முதல் படத்திலேயே ஒரு க்ரைம் கதையை எடுத்துக்கொண்டு, அதற்கு சரியான நடிகர்களை தேர்ந்தெடுத்து, லாஜிக் யோசிக்கவிடாமல் விறுவிறுவென படத்தை நகர்த்தி, ‘போர் தொழில்’ மூலம் அட்டகாச வெற்றி கொடுத்திருக்கிறார் விக்னேஷ் ராஜா.

ஒரு கலகலப்பான காதல் படத்தை புதிய கோணத்தில் சொல்லியது, ‘டாடா’ திரைப்படம். ஜாலியாகவும் அதேநேரம் சென்டிமென்ட் ஆகவும் கொடுத்து மனதை தொட்டிருக்கிறார் இயக்குனர் கணேஷ் கே.பாபு. நடிகர் கவினுக்கு பெரிய திருப்புமுனையாக இந்த படம் மாறியிருக்கிறது.

சாதாரண குறட்டை பிரச்னையை மையப்படுத்தி சாதாரண நடிகர்களை வைத்து அற்புதமான ’குட்நைட்’ என்ற குடும்பப் படத்தை கொடுத்து வெற்றியடைய வைத்திருக்கிறார் இயக்குனர் விநாயக் சந்திரன். தமிழிலும் மலையாளப் படம் போன்று எல்லா பிரச்னைகளையும் பேச முடியும் என்று காட்டியிருக்கிறார் விநாயக்.

இன்றைய மிடில் கிளாஸ் மக்களின் பெருந்துயரமாக மாறியிருக்கும் கார் பார்க்கிங் பிரச்னையை முன்வைத்து ஒரு முழு நீள படத்தை உருவாக்கி வெற்றியடைய வைத்திருக்கிறார் இயக்குனர் ராம்குமார் பாலகிருஷ்ணன்.

இன்னும் சில புதுமுக இயக்குனர்கள் படங்களும் இந்த ஆண்டு வெளியாகியிருக்கிறது என்றாலும் சிறந்த அறிமுக இயக்குனர் போட்டிக்கு இந்த ஐந்து பேர் மட்டுமே பரிசீலனை செய்யப்பட்டனர்.

இவர்களில் முதல் படம் என்பது தெரியாத அளவுக்கு நேர்த்தியாக க்ரைம் கதையை படமாக்கியிருந்த விக்னேஷ் ராஜா சிறந்த புதுமுக இயக்குனர் விருது பெறுகிறார்.










## சிறந்த இசையமைப்பாளர்: ஏ.ஆர்.ரகுமான் (மாமன்னன், பொன்னியின் செல்வன் 2)

நீண்ட காலத்திற்கு பிறகு விடுதலை படத்தில் இளையராஜாவின் இசை அதிகம் பேசப்பட்டது. அனிரூத், ஜி.வி.பிரகாஷ், சந்தோஷ் நாராயணன், நிவாஸ் கே. பிரசன்னா ஆகியோரது பாடல்கள் இந்த ஆண்டு பட்டயக் கிளப்பின என்பது உண்மைதான். ஆனால், இரண்டு படங்களில் அழுத்தமான இசையைப் பதித்து, சிறந்த இசையமைப்பாளர் விருது பெறுகிறார் ஏ.ஆர்.ரகுமான். தமிழ் வார்த்தைகளைக் கொண்டு பாடல் உருவாக்குவதை யூத் இசையமைப்பாளர்கள் மறந்தே போய்விட்ட நிலையில், தொடர்ந்து தன்னுடைய படங்களில் அழுத்தமான தமிழுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கும் ஏ.ஆர்.ரகுமான், பொன்னியின் செல்வன் மற்றும் மாமன்னன் படங்களுக்காக சிறந்த இசையமைப்பாளர் விருது பெறுகிறார்.





## சிறந்த பாடல்: அகநக அகநக முகநகையே (பொன்னியின் செல்வன் 2

பொன்னியின் செல்வன் என்றதுமே வைரமுத்துவால் மட்டுமே இந்த படத்துக்கு பாடல்கள் எழுதமுடியும் என்று நினைத்தார்கள். அவர் படத்தில் இல்லை என்ற செய்தியே பெரும் அதிர்வலைகளை உருவாக்கியது. ஆனால், வைரமுத்து போன்று பாடல் எழுதுவதற்கு தமிழகத்தில் நிறைய கவிஞர்கள் தகுதியுடன் இருக்கிறார்கள் என்பதை அழுத்தமாக பொன்னியின் செல்வன் படத்தின் மூலம் பதிய வைத்திருக்கிறார் இளங்கோ கிருஷ்ணன்.  அந்தாதி பாணியில் மிகவும் சின்னச்சின்ன வார்த்தைகளில் எழுதிய அகநக பாடல் சிறந்த பாடலாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. சிறந்த பாடல் எழுதிய கவிஞர் இளங்கோ கிருஷ்ணன் சிறந்த பாடலாசிரியராக தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்.



## சிறந்த பாடகர்: விஜய் ஜேசுதாஸ் (நெஞ்சமே நெஞ்சமே – மாமன்னன்)

சிறந்த பாடல்களுக்கு இந்த ஆண்டு பஞ்சமே இல்லை. இளையராஜாவின் காட்டு மல்லி, சித்ஶ்ரீராம் டக்கர் படத்தில் பாடிய நிரா, ஹரிசரனின் சின்னஞ்சிறு நிலவே போன்ற பாடல்கள் மிகப்பெரும் வெற்றி பெற்றன. நெஞ்சைத் தொடும் வகையில் மாமன்னன் படத்தில் நெஞ்சமே பாடலை பாடியிருந்தார் விஜய் ஜேசுதாஸ். செம ஹிட் மெலோடி எனும் வகையில், இந்த ஆண்டு சிறந்த பாடர் விருது பெறுகிறார் விஜய் ஜேசுதாஸ்.





## சிறந்த பாடகி: சக்திஶ்ரீ கோபாலன் (அகநக – பொன்னியின் செல்வன் 2)



வாத்தி படத்தில் வா வாத்தி பாடலை பாடிய ஸ்வேதா மோகன், அகநக பாடலை பாடிய சக்திஶ்ரீ கோபாலன் ஆகிய இருவரும்தான் தேர்வுப் பட்டியலில் இடம்பிடித்தனர். பொன்னியின் செல்வன் படத்தில் அகநக பாடலை நளினமாகவும் தெளிவாகவும் பாடிய சக்திஸ்ரீ கோபாலனுக்கே சிறந்த பாடகி விருது வழங்கப்படுகிறது. இவரே நெஞ்சமே நெஞ்சமே பாடலையும் உணர்வுபூர்வமாகப் பாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



## சிறந்த வில்லன்:
## பகத் பாசில் (மாமன்னன்)

விடுதலை படத்தில் நெகடிவ் கேரக்டரில் சேத்தன் மிகவும் சிறப்பாக நடித்திருந்தார். அதேநேரம், அவருக்கு வேறு வகையில் உணர்வுகளை தெரிவிக்கும்படி காட்சியமைப்பு இல்லை என்பதால், அவரது வேறு பரிமாணங்களை பார்க்க இயலவில்லை. வாத்தி சமுத்திரக்கனியை பட்டியலிலே சேர்க்க முடியாத அளவுக்கு செயற்கையாக இருந்தது. ஜெயிலர் படத்தில் டெரர் வில்லனாக நடித்திருந்தார் விநாயகன். அவரது ஸ்லாங் ரொம்பவே பேசப்பட்டது. அதேநேரம், இவருக்கும் படத்தில் உருப்படியாக வேறு வகையான காட்சிகளே இல்லை. மாவீரன் படத்தில் மிஸ்கின் கத்திக் கொண்டே இருந்தாரே தவிர, வேறு வகையில் நடிப்பதற்கு முயற்சிக்கவில்லை. மாரி செல்வராஜின் மாமன்னன் படத்தில் நடித்த பகத் பாசிலுக்கு கிட்டத்தட்ட நாயகனுக்குரிய அத்தனை முக்கியத்துவமும் கொடுக்கப்படிருந்தது. அதனை அவரும் ரொம்பவே சிறப்பாக செய்திருந்தார். ஆகவே, 2023 தமிழ் லீடர் வில்லன் விருது பெறுகிறார் பகத் பாசில்.








## சிறந்த நகைச்சுவை நடிகர்:
## யோகி பாபு (மாவீரன்)

நகைச்சுவை பஞ்சம் தமிழ் படங்களில் தலைவிரித்து ஆடுகிறது என்றுதான் சொல்ல வேண்டும். டிடி ரிட்டர்ன்ஸ் படத்தில் சந்தானத்தைவிட, நான் கடவுள் ராஜேந்திரன் பல இடங்களில் குபீர் சிரிப்பு வரவழைத்தார். டிடி ரிடர்ன்ஸ், ஜெயிலர், மார்க் ஆன்டனி படங்களில் ரெடின் கிங்ஸ்லி ஓரளவு சிரிப்பு வரவழைக்க முயற்சி செய்தார் என்றாலும், தனி ரூட் நகைச்சுவை நாயகராக அவர் உருமாறவில்லை. யோகி பாபுக்கு பல படங்கள் இந்த ஆண்டு வெளியாகியிருந்தாலும், எதிலும் நகைச்சுவைக்கு அத்தனை முக்கியத்துவம் இல்லை. ஆனால், மாவீரன் படத்தில் யோகிபாபுக்கு மிகச்சிறப்பான கேரக்டர். அவருக்கேற்ற காமெடி என்பதால் டைமிங்கில் பின்னி பெடலெடுக்கிறார். ஆகவே, மாவீரன் படத்தில் நடித்த யோகி பாபுக்கு இந்த ஆண்டின் சிறந்த நகைச்சுவை நடிகர் விருது கிடைக்கிறது.



## சிறந்த துணை நடிகர்: எஸ்.ஜே.சூர்யா (ஜிகிர்தண்டா டபுள் எக்ஸ்)

போர் தொழில் படத்தில் சரத்குமார் அதகளப்படுத்தியிருந்தார். இன்னும் தெளிவாகச் சொல்வது என்றால், போர் தொழில் படம் வெற்றி அடைவதற்கே சரத்தின் உடல்மொழி ரொம்பவே பயனுள்ளதாக இருந்தது. அதேபோல் பார்க்கிங் படத்தில் எம்.எஸ்.பாஸ்கரின் நடிப்பு பிரமாதம் என்று பாராட்டும் அளவுக்கு இருந்தது. அந்த படத்தையும் முழுமையாக வெற்றியை நோக்கி நகர்த்தியவர் பாஸ்கர்தான். தண்டட்டி படத்தில் பசுபதி நடிப்பும், இறுகப்பற்று படத்தில் விதார்த் நடிப்பும் கவனிக்க வைத்தது. இவர்கள் இருவரையும்விட ஜிகிர்தண்டா டபுள் எக்ஸ் படத்தில் எஸ்.ஜே.சூர்யா நடிப்பு வேறு மாதிரி என்று சொல்லவேண்டும். ஒரே கேரக்டரில் ஒன்பது வகையாக நடித்து அதகளம் செய்துவிட்டார். அதனால், கடுமையான போட்டிக்கு இடையில் சிறந்த துணை நடிகர் விருதை தட்டிச் செல்கிறார் எஸ்.ஜே.சூர்யா.




## சிறந்த துணை நடிகை: சரிதா (மாவீரன்)

சரிதா நடிக்கிறார் என்றால் அது அழுத்தமான வேடமாகத்தான் இருக்க முடியும். அப்படியொரு ஆவேசமான அம்மாவாக மாவீரன் படத்தில் சிறப்பாக நடித்திருந்தார் சரிதா. தன்னுடைய மகன் கோழையாக இருக்கிறான் என்பதற்காக வருந்துவதும், மகனுக்கு வீரம் வந்ததை எண்ணி பெருமிதப்படுவதுமாக அட்டகாசம் காட்டியிருக்கிறார்.

இவருக்குப் போட்டியாக இந்த ஆண்டு வேறு யாரும் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். தண்டட்டி படத்தில் பிணமாக நடித்திருந்த ரோகிணிக்கு நடிப்பதற்கு கொஞ்சமே நேரம் கிடைத்தது. அதனாலோ என்னவோ, அந்த வேடம் அத்தனை தூரம் எடுபடவில்லை. ஆகவே, போட்டியே இல்லாமல் சிறந்த துணை நடிகை விருதினை தட்டிச் செல்கிறார் சரிதா..



## சிறந்த வசனகர்த்தா:
## யுவராஜ் தயாளன் (இறுகப்பற்று)

இந்த ஆண்டு வெளியான படங்களில் இறுகப்பற்று படத்திற்கான வசனங்கள் தனித்தன்மையுடன் திகழ்ந்ததை மறுக்க முடியாது. சிக்கலான கதையோட்டம். கணவன், மனைவிக்கு இடையிலான பிரச்னைக்கு ஆலோசனை சொல்வதை, மனநலக் குறைபாடு என்று சொல்லிவிட முடியாது. ஆகவே, கத்தி மீது நடப்பது போன்று வசனங்கள் தேவை. அதை சிறப்பாக செய்திருக்கிறார் யுவராஜ்.

குறிப்பாக, விதார்த், ஸ்ரீ ஆகியோரிடம் இருக்கும் பிரச்னைகளை வார்த்தைகளில் கொண்டுவருவதில் ரொம்பவே மெனக்கெட்டிருக்கிறார். படத்தின் ஒவ்வொரு வசனத்திலும் வாழ்க்கைக்குத் தேவையான விஷயங்களையும் சொல்லித்தருகிறார். ஆகவே, சிறந்த வசனகர்த்தா விருதை மிக எளிதாக தட்டிச் செல்கிறார் யுவராஜ் தயாளன்.



## சிறந்த எடிட்டர்:
## ஸ்ரீஜித் சாரங் (போர் தொழில்)

பெரிய பட்ஜெட் படங்களை சுவாரஸ்யமாக எடிட் செய்து கொண்டுபோவது ரொம்பவே எளிது. ஏனென்றால் பெரிய நடிகர்கள் இருப்பார்கள், அவர்கள் என்ன பேசினாலும், செய்தாலும் அதை ரசிப்பதற்கென பெரிய கூட்டமே இருக்கும். அது, சின்ன பட்ஜெட் படங்களுக்கு எடுபடாது. ஒவ்வொரு காட்சியும் அழுத்தமாகப் பதிவதுடன், விறுவிறுப்பாக சென்றால் மட்டுமே, இந்த படங்களை ரசிப்பார்கள். அதுவும் க்ரைம் படங்களுக்கு என்றால் சொல்லவே வேண்டாம். விறுவிறுப்பு குறைந்துவிட்டாலே ரசிகர்கள் லாஜிக் பார்க்கத் தொடங்கிவிடுவார்கள். அவர்களை யோசிக்கவே விடாமல் படத்தொகுப்பு வேகமாக இருந்தால் மட்டுமே, அந்த படம் வெற்றியை நோக்கி நகரும். போர் தொழில் படத்தை அப்படித்தான் சுவாரஸ்யமாகவும் வேகமாகவும் நகர்த்தியிருந்தார் எடிட்டர் ஸ்ரீஜித் சாரங். அதனாலே, 2023 சிறந்த எடிட்டர் விருது பெறுகிறார்.

# சிறந்த அனிமேஷன்: கழுதைப்புலிக்கு விருது..!



தமிழ் சினிமாவில் முதன்முறையாக சிறந்த அனிமேஷன் விருது லியோ படத்தில் நடித்த சுப்பிரமணி என்ற கழுதைப்புலிக்கு அழ்கிடைத்துள்ளது.

இந்த விருது பெறுவதற்கு மாமன்னன் பன்றிக்குட்டிக்கும் சந்திரமுகி படத்தில் வந்த நாய்களுக்கும் போட்டி வந்தது. சந்திரமுகி படத்தில் நாய், பாம்பு போன்றவை எட்டிப் பார்த்து விட்டு செத்துப் போய்விடுகிறது.

ஆனால், கழுதைப்புலி படம் முழுக்க வருகிறது. லியோ படத்தின் வெற்றிக்கு இந்த கழுதைப்புலியின் சண்டை ரொம்பவே உதவியிருக்கிறது என்றால் மிகையில்லை. எனவே, மிக எளிதாக லியோ கழுதைப் புலி சிறந்த அனிமேஷன் விருது பெறுகிறது.




# மரண மொக்கை திரைப்படம்: சந்திரமுகி 2

நல்ல திரைப்படத்துக்கும், கலைஞர்களுக்கும் மகிழ்ச்சியுடன் அங்கீகாரம் கொடுக்கும் நேரத்தில், சரியாக வடிவமைக்கப்படாத சில படங் களையும் அடையாளம் காட்டவேண்டியிருக்கிறது. மெகா பட்ஜெட்டில் ரசிகர்களை முட்டாளாக நினைத்து எடுக்கப்பட்ட படங்கள் மட்டுமே கணக்கில் எடுக்கப்பட்டன. சிறிய பட்ஜெட் படங்களை பரிசோதனை முயற்சியென ஓரம் கட்டியதால் ஆர்யா, ஜெய், பிரபுதேவா, கவுதம் கார்த்திக்கின் படங்கள் தப்பின. அதன்பிறகும் மொக்கை விருது பெறுவதற்கு இந்த ஆண்டு எக்கச்சக்க போட்டி. கார்த்தி, விஜய் ஆண்டனி, ஜெயம் ரவி, லாரன்ஸ் நடித்த படங்கள் கடுமையாக போட்டியிட்டதில் இறைவன் படமும் சந்திரமுகி 2 படங்களும் இறுதிச்சுற்றுக்கு வந்தன. சைக்கோ கில்லர், சீரியல் கில்லர் இறைவன் படத்தில் இருந்தாலும் உண்மையான கில்லர் இயக்குநர் தான். கதையும் சீன்களும் பிட்டு படம் போன்று தாவித்தாவி எங்கெங்கோ பறக்கிறது. காரணமே இல்லாமல் ஆட்களை சுட்டுக் கொல்லும் ஜெயம் ரவி, கண்ணுக்கு முன்னே இருக்கும் வில்லனை சுட்டுக் கொல்லாமல் ரசிகர்களை சித்ரவதை செய்கிறார். படம் முடித்து வெளியே வந்ததும் கிடைக்கும் சுதந்திரம் இருக்கிறதே, அடேங் கப்பா... ஏகப்பட்ட எதிர்பார்ப்புகளுடன் வெளியான சந்திரமுகி 2. படத்தில் ரஜினிக்குப் பதிலாக லாரன்ஸ், ஜோதிகாவு க்குப் பதிலாக லட்சுமி மேனன் என்பதெல்லாம் சரி. சந்திரமுகி யாக கங்கனா, முருகேசனாக மீண்டும் வடிவேலுவும் சகிக்கலை ரகம். சந்திரமுகி ஆவி கத்திக்கொண்டே இருப்பதும், குடும்பமே சீரியஸ் ஸ்டைலில் பயப்படு வதும், அவ்வப்போது சில தலைகளை வெட்டிப் போடுவதும் உவ்வேக். வேட்டையன் ஆவியைப் போலவே குணசேகரன் ஆவி, செங்கோட்டையன் ஆவியும் வந்துவிடுமோ என்று மிரட்டிவிட்டார் வாசு. மெகா பட்ஜெட், நட்சத்திர பட்டாளம் இருந்தும் ஒரு சீன் கூட ரசிக்கும்படி இல்லை என்பதால், 2023 மொக்கை சினிமா விருதை சந்திரமுகி 2 பெருமையுடன் தட்டிச்செல்கிறது.


ஞானகுரு
தமிழ் லீடர்

நிறுவனர்
**எஸ்.கே.முருகன்**

ஆசிரியர்
**எம்.நிர்மல்**

வெளியீட்டாளர்
**எம்.ஜோதி**

வடிவமைப்பு
**வி.கிராபிக்ஸ்**
**கே.எம்.பிரசன்னா**

நிர்வாக இயக்குனர்
**அரசு கிருத்திகா**


முதன்மை செயல் அலுவலர்
**மணியன் கலியமூர்த்தி**

ஒருங்கிணைப்பாளர்
**ரத்தினபாண்டியன்**

**ஞானகுரு பப்ளிகேஷன்**
ஜி2, கோவிந்த் அபார்ட்மெண்ட்,
6, ஏஜிஎஸ் காலனி 4வது தெரு,
கொட்டிவாக்கம், சென்னை - 41.
**தொடர்புக்கு:** +91 98409 03586, 72997 53999, 80725 89355
**இணையதளம் :** gyanaguru.com








## 25 புத்தகங்கள் 500 ரூபாய்...

ஞானகுரு வழங்கும் மகிழ்ச்சி தமிழ் மாத இதழ் மற்றும் ஹேப்பினஸ் ஆங்கில மாத இதழ்களின் அத்தனை பிரதிகளும் வேண்டுமா..? கீழ்க்கண்ட எண்ணுக்கு ஜிபே மூலம் 500 ரூபாயுடன் உங்களுடைய மெயில் ஐடி அனுப்பிவையுங்கள். அத்தனை மின் இதழ்களும் அனுப்பிவைக்கப்படும்.

**GPAY : +91 72997 53999**

# கணவன், மனைவி, பெற்றோர், குழந்தைகள், காதலர்கள் என உறவுகளுக்குள் எழும்

# குழப்பங்களுக்கு கவுன்சிலிங்...



**திருமணத்திற்கு முன்... திருமணத்திற்கு பின்...**

**சிறப்பு ஆலோசனைகள்**

தொடர்புக்கு

GG Relationship Counseling

+91 80725 89355